# சங்க இலக்கியங்களில் மகளிர் உளவியல் சிந்தனைகள்

*சங்கப் பாக்களில் இடம்பெற்றுள்ள மகளிர் சார்ந்த பண்பாட்டு உளவியல் கூறுகளைத் தொகுத்துரைக்கின்றது.*

மனித உணர்வுகளையும், உறவுகளையும், இயற்கைச் சூழலையும், அறச்சிந்தனைகளையும் தன்னகத்தே கொண்ட கருத்துக் கருவூலமாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்க கால மகளிர் களவு வாழ்க்கையிலும், கற்பு வாழ்க்கையிலும் சிறந்தவர்களாகவே வாழ்ந்துள்ளனர். சிலர் உளப் போராட்டங்களால் மனத் துயரம் எய்திடினும் அதனையும் கடந்து அறவாழ்வினை மேற்கொண்டவர்கள். இத்தகைய பெண்களின் உடல், உள்ளம் சார்ந்த உளவியல் சிந்தனைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

களவில் பிரிவுக்காலத்தை நீட்டித்ததால் தலைவியின் உடலில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்ட தாய் இது தெய்வத்தால் ஏற்பட்ட நோய் என்று கருதி வெறியாட்டு நிகழ்த்தினால் நோய் தீருமென்று கருதும் உளப்பாங்கினை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

**அணங்கு அறி கழங்கின் கோட்டம் காட்டி**
**வெறி எனஉணர்ந்த உள்ளமொடு மறி அறுத்து**
**அன்னை அயரும் முருகு நின்**
**பொன் தேர் பசலைக்கு** (நற்.47:8-11)

வெறியாட்டு என்பது நாட்டுப்புற மருத்துவக் கூறுகளில் ஒன்றான மத நாகரீக மருத்துவமாகக் கருதப்பட்டு உளவியல் ரீதியாக இச் செயல் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் கொள்ளலாம்.

தலைவன் பகற்குறியிலே தலைவியைச் சந்திக்க வருகின்றான். பகற்குறியில் தலைவியைச் சந்திப்பதனால் என்ன நிகழும் என்பதைத் தோழி ஒருத்தியே அறிவாள். மூவரும் ஒரு புன்னை மரத்தடியிலே நின்று அளவளாவுகின்றனர். தலைவனின் உள்ளக்கிடக்கையை உணர்ந்த தோழி, தலைவனிடம், இவ்விடத்தில் எதுவும் நிகழ வேண்டாம். ஏனென்றால் இப்புன்னை மரத்தை நாங்கள் நெய்யோடு கலந்த இனிய பாலை ஊற்றி அருமையாக வளர்த்தோம். இச்செயலைக்

**முனைவர் க். கலாவதி**
தமிழ் உதவிப்பேராசிரியர்
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 043.



கண்ட அன்னை இப்புன்னை மரம் உங்களோடு பிறந்த தங்கையாகும் என்று கூறினாள். தங்கை இருக்கும் போது தவறிழைப்பது கூடாத செயலாகும். வேண்டுமெனில் வேறு இடத்திற்குச் செல்வோம் என்று கூறினாள். தோழியின் இக்கூற்று தலைவனின் பகற்குறி மறுத்தமைக்கு அமைந்த ஓர் உளவியல் உத்தியாகும். மேலும் கானும் புள்ளும் ஆகிய இயற்கையெல்லாம் களவெழுக்கத்திற்குக் கருவியாகும் என்பது இக்கூற்றால் புலனாகிறது

தலைவனும் தலைவியும் களவு வாழ்வில் எவரையும் சாட்சியாகக் கொள்ளாமல் திருமணம் செய்து கொள்கின்றனர். 'என்றும் உன்னைப் பிரியேன்' என்று கூறி மணம்முடித்த தலைவனின் உரை பொய்யாகிவிடுமோ என்று அஞ்சித் தலைவி தோழியிடம் நடந்ததை எடுத்துக்கூறுகின்றாள்.

**யாரும் இல்லை தானே கள்வன்**
**தான் அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ**
**தினைத்தாள் அன்ன சிறு பசுங்கால்**
**ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்**
**குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே** (குறுந்.25)

காதல் வாழ்வில் நம்பிக்கையும், சொல் திறம்பா நேர்மையும் தலைவன் தலைவி இருவர்பால் இருந்தாலும், தலைவன் சொல் தவறினால் சமுதாயம் சார்ந்தும், உடல், உளம் சார்ந்தும் ஏற்படும் உளவியல் சார்ந்த துன்பம் தலைவிக்கு மட்டுமே உண்டாகிறது என்பதை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

கணவன் மனைவி என்னும் உறவு பல பிறவிகளிலும் தொடர்ந்து வரும் என்றும், முன்னைப் பிறவிகளில் கணவன் மனைவியராக வாழ்ந்தவர்களே ஊழின் வலிமையால் மீண்டும் கூடுகின்றனர் என்ற நம்பிக்கை பாற்பட்ட உளவியல் சிந்தனை மக்களிடையே நிலவுகின்றது.

**இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீ ஆகியர் எம் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே** (குறுந்.49)

இப்பாடலடிகள் பரத்தைமாட்டு பிரிந்த தலைவன் மீண்டும் வந்தபோது நெய்தல் நிலத் தலைவியின் உள்ளக் குமுறலை வெளிக் கொணர்வதாக அமைந்துள்ளது.

தலைவி மனைவியாக இருப்பினும், நெஞ்சு நேர்பவள் என்னும் பேறு பரத்தைக்கே வாய்க்கப்பெறும். ஆதலால் தலைவி தலைவனிடம் மனைவி என்ற தகுதியோடு, நெஞ்சு நேர்பவளாம் தகுதியும் தனக்கே வாய்க்கப்பெற வேண்டும் என வேண்டினாள். மறுமையிலாவது

தலைவன் பரத்தைமாட்டு செல்லாமல் தனக்கு மட்டுமே உரியவனாக வேண்டும் என விரும்பினாள். மேலும் இம்மை மறுமை பற்றிய சிந்தனையும், மறுபிறப்புப் பற்றிய சிந்தனையும், வினைப்பயன் தொடர்வது பற்றிய சிந்தனையும் ஆகியன நம்பிக்கை வயப்பட்ட உளவியல் சிந்தனைகளாக வெளிப்படுகின்றன.

தலைவன் தலைவியின் உளப்பாங்கினையும் உளவியல் சிந்தனையையும் எதிரொலிப்பதாகக் குறுந்தொகையில் அமைந்த ஒரு பாடல்,

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**<br>
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்**<br>
**குவளை உண்கண் குய்ப்புகை**<br>
**தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**<br>
**இனிதுஎனக் கணவன் உண்டலின்**<br>
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே** (குறுந்.167)

இப்பாடல் முல்லைநிலத் தலைவியின் உள்ள மகிழ்வை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. தான் முயன்று செய்த புளிக்குழம்பின் சுவையைப் பாராட்டிக் கணவன் உண்டு அதன் சுவையை 'இனிது' என்று அவன் பாராட்டிய போது அவள் முகம் பிறர் அறியாத வண்ணம் நுண்ணிதாக மகிழ்ந்தது. புகையால் கண்களிலே நீர் வழிய, கண்கள் சிவக்க அடிசில் ஆக்க அவள் மேற்கொண்ட துன்பங்கள் எல்லாம் பகலவனைக் கண்ட பனிபோல் நீங்க உள்ளம் குளிர்ந்தாள். தலைவி அடிசில் ஆக்கும் திறமும், தலைவனின் அன்போடு இயைந்த பாராட்டு மொழிகளும், அப்புகழ் மொழிகளால் தலைவி செருக்குக் கொள்ளாது அகத்தே மகிழும் அரிய பண்பும் இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது.

தலைவி தன் காதலனொடு உடன் போக்கினை மேற்கொண்ட பின்பு மீண்டும் தன்னூர் வருகின்றாள். பலநாட்கள் கழித்து தலைவியைச் சந்தித்த தோழி தலைவியின் நலனை விசாரித்ததோடு உன் தலைவன் நாட்டில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லையாமே என்று கேட்கிறாள். அதற்குத் தலைவி,

**அன்னாய் வாழி! வேண்டும் அன்னை! நம் படப்பைத்**<br>
**தேன் மயங்கு பாலினும் இனிய - அவர் நாட்டு**<br>
**உவலைக் கூவற் கீழ்**<br>
**மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே** (ஐங்.203)

என்று விடை பகர்ந்தாள். தலைவி தலைவன் நாட்டுப் பெருமையை விட்டுக் கொடுக்காமல் கூறும் பாங்கு படித்து இன்புறத்தக்கது. ஆவின் பாலும், படப்பைத் தேனும் மிகவும் சுவை மிக்கன. அதிலும் தாயூட்டத் தன் வளமனைக்கண் உண்ட தேன் கலந்த பாலைவிடத்



தன் காதலன் நாட்டில் மானுண்டு எஞ்சிய அழுங்கல் சின்னீர் பெரிதும் இனிதாயிற்று என்று கூறும் தலைவியின் கூற்றில் சிறந்த காதலின் உளவியல் சிந்தனை மேலோங்கி நிற்கின்றது.

தங்கள் கணவன் வறுமையுற்ற காலத்தில் அதனை எண்ணி வருந்தாது பிறந்தவீட்டின் செல்வச் செழிப்பை எண்ணி அங்குச் செல்லாது கணவன் வீட்டின் வறுமையை வெளிப்படுத்தாமல் வாழும் வாழ்க்கையைக்,

**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென**<br>
**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்**<br>
**ஒழுகுநீர் நுணங்கறல் போல**<br>
**பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையளே** (நற்.110)

இப்பாடல் குடிப்பெருமையைக் காக்கும் (ஓர் இல்லத்தரசியின்) உளவியல் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது.

**தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்**<br>
**இகழினும் கேள்வரைப் போற்றி ஒழுகுவார்** (பரி.20:86-87)

என்னும் பரிபாடலடிகள் கணவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் பொருட்படுத்தாது பொறுமையாக அவனோடு ஒத்து வாழும் வாழ்க்கையே இல்லறமாம் நல்லறமாகும் என்று வாழும் பெண் களின் உளப்பாங்கினை எடுத்துரைக்கின்றன.

பொருள்வயின் பிரியக்கருதிய தலைவன் தலைவி வருந்துவாள் என்று கருதி சொல்லாது பிரிய எண்ணினான். குறிப்பறிந்து தோழி பொருளினது நிலையாமையை எடுத்துரைத்து இல்வாழ்க்கைச் செலவே சிறந்த பொருளாம் என்று கூறி தலைவனின் செயலைத் தடுத்தாள். இல்வாழ்க்கையை முறைப்படி நடத்துவதற்கு வேண்டிய பொருளை ஈட்டுவதற்குத் தலைவன் தலைவியைப் பிரியக் கருதினான். இதனை அறிந்த தோழி, அன்பு ஒன்றுதான் அழியா பொருள். அதனைத் தலைவியிடமிருந்து நீ பெறலாம். அவளைப் பிரியாமையே இன்னும் சிறந்த செல்வமாகும் என்று கூறி தலைவனின் செலவினைத் தடுக்கும் தோழியின் உளச்சிந்தனை போற்றுதற்குரியதாகும்.

**கல் இறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ**<br>
**தொல் இயல் வழாஅமைத் துணை எனப் புணர்ந்தவள்**<br>
**புல் ஆகம் பரியாமை பொருள்வயின் அல்லதை** (கலி.2: 16-18)

உணர்ச்சிகளின் மேலோங்கிய நிலையே மனவெழுச்சியாகும். மிகுந்த ஆர்வத்தாலோ அல்லது அதிக பாதிப்பு ஏற்படும் போதோ மனவெழுச்சி தோன்றுகின்றது. மகிழ்ச்சி, பெருமிதம், சினம்,

அச்சம், வலி, பொறாமை, பாராட்டு போன்ற காரணங்களால் மனவெழுச்சி உண்டாகும்.

மனிதனுக்கு இவ்மனவெழுச்சியால் ஏற்படும் உளநோய்தான் உடல்நோயாக மாறும். வினை காரணமாகத் தலைவியைப் பிரிந்த தலைவன் வரவு காலத்தை நீட்டித்தான். பிரிவாற்றாமையால் வருந்திய தலைவி, புதிதாய் வந்த முன்பனிக் காலத்தில் என் மாமையாகிய பேரழகைப் பசலைநோய் கவர்ந்துண்டு என்னை வருத்துகிறதே (அகம் - 273: 4-5) என்று தன் நெஞ்சிற்குக் கூறுபவளாய்க் கூறி வருந்துகிறாள். உடலில் பசலை நோய் தோன்றுவது உடலில் ஏற்படும் உளவியல் மாற்றமாகும்.

**தலைவரம்பு அறியாத் தகைவரல் வாடையொடு**
**முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை**
**அசைவுடை நெஞ்சத்து உயவுத்திரள் நீடி**
**ஊரோர் எடுத்த அம்பல் அம்சினை**
**ஆராக் காதல் அவிர்தளிர் பரப்ப**
**புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்**
**நிலவரை எல்லாம் நிழற்றி**
**அலர் அரும்பு ஊழ்ப்பவும் வாரா தோரே** (அகம்.273:10-17)

இப்பாடல் மூலம் தலைவன் பிரிந்த காலத்தில் தலைவிக்கு நேர்ந்த உளவியல் சார்ந்த உள்ளுணர்வுகள் மனவெழுச்சியாக மாறியதை அறியமுடிகின்றது.

சங்கப் பெண்களின் வீரமும், நாட்டுப்பற்றும் பாராட்டுக்குரியனவாகும். வீரத்தாயின் வஞ்சினத்தைக் கேட்டால் புறக்கள்கூட போருக்குப் புறப்படும்.

**முளரி மருங்கின் முதியோள் சிறுவன்**
**படை அழிந்து மாறினன் என்று பலர் கூற**
**'மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட என்**
**முலை அறுத்திடுவேன் யான்' எனச் சினை இ** (புறம்-278:2-5)

என்று சினந்து வாளொடு சென்ற தாய் உண்மை உணர்ந்து உவகை கொண்ட சிறப்பினை இப்பாடல் விளக்குகிறது. தாயின் நாட்டுப்பற்று, போரிலே புறமுதுகில் புண்பட்டால் இழுக்கு என்றுணர்ந்த பெருமிதம் இவ்விரண்டும் தாயின் மனவெழுச்சியைக் காட்டுகின்றது.

## நிறைவாக

சங்ககாலப் பெண்கள் நாட்டின் பெருமையை உயர்த்துதல், களவு வாழ்க்கையில் அறத்தைக் கடைபிடித்தல், கற்பு வாழ்கையில் இல்லறம் பேணுதல் மற்றும் தலைவனின் குடிபெருமையைக் காத்தல் போன்ற பண்பாடு சார்ந்த உளவியல் சிந்தனைகளைக் கொண்டவர்களாக விளங்கினர்.